தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 9, சித்ரபானு —திருவள்ளுவர் ஆண்டு 2033

2002 ஏப்ரல் 22, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம் ஏர்த்தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது. எனவே எவ்வளவுதான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே சிறந்தது.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 185, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

185—

சாலை மேம்பாடு

***3983—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் ஒன்றியம், இராமசாமியாபுரத்திலிருந்து பாறைக்குளம் வரையுள்ள சாலையை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2002 ஏப்ரல் 22

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினாவிற்குண்டான விடை தற்சமயம் இல்லை.

திரு. எம். சுப்பையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, நெல்லை மாவட்டம், வாசுதேவநல்லூர் ஒன்றியத்திலே ஓர் இல்ல நிகழ்ச்சிக்கு நான் சென்றபோது—இராமசாமியாபுரத்திலிருந்து பாறைக்குளம் வரை ரோடு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அந்த இல்ல நிகழ்ச்சிக்குச் சென்றபோது, பொதுமக்கள் எல்லாம் இந்தச் சாலையைச் செப்பனிட வேண்டும். டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசு வந்துதான் இதைச் செய்ய வேண்டுமென்று என்னிடம் முறையிட்டார்கள். சுமார் 5 ஆயிரம் பேர் இராமசாமியாபுரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சாலையை இந்த ஆண்டே செப்பனிட்டால்,—அது முக்கியத்துவமான சாலை—பொதுமக்களுக்கு அத்தியாவசியமாக சென்று வருவதற்கு ஏதுவாக இருக்கும். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசு இந்த ஆண்டிலேயே அதைச் செய்து தர முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிந்து கொள்ள விரும்புகின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, இது வாசுதேவநல்லூர் பற்றியது.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சாலை கிலோமீட்டர் 0/0-7/0 நீளம் கொண்ட மாவட்ட இதரச் சாலையாகும். இச்சாலையைச் சீரமைக்க தோராயமாக ரூ. 35 இலட்சம் தேவைப்படும். இப்பணி தற்போது செயலாக்கப்பட்டு வரும் அரசு திட்டப் பணிகள் எதிலும் இடம் பெறவில்லை. வருமாண்டுகளில் அரசின் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அளித்து செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 186, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.